வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 1081/அ1/2024 நாள்.15.03.2024.

பொருள் தமிழ்நாடு அமைச்சுப் பணி – பள்ளிக் கல்வித் துறையில் இளநிலை உதவியாளர் / உதவியாளர்களாக பணி நியமனம் பெற்று பணிபுரிந்து வரும் பணியாளர்கள் – பணிவரன் மற்றும் தகுதிகாண் பருவம் சார்ந்த கருத்துருக்கள் அனுப்புவது – அறிவுரைகள் வழங்குவது – தொடர்பாக

பார்வை 1.சென்னை.6. பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.6754/அ4/இ4/2024 நாள்.17.02.2024

------------

பார்வையில் காணும் சென்னை.6. பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகளின்படி தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ் பள்ளிக் கல்வித் துறையில் இளநிலை உதவியாளர்கள் மற்றும் உதவியாளர்களாகவும், தட்டச்சர்களாகவும் பணிநியமனம் பெற்று பணிபுரிந்து வரும் பணியாளர்களின் 53 வயது தளர்வாணை பவானிசாகர் பயிற்சி தாமதமாக முடித்தமைக்கு விதி தளர்வளித்து தகுதிகாண் பருவம் முடிக்க கோரும் கருத்துருக்கள் உரிய காலத்தில் சார்நிலை அலுவலகத்தில் முடிக்கப்படாமலும் அரசுக்கு அனுப்பப்பட வேண்டிய கருத்துருக்கள் உரிய காலத்தில் அனுப்பப்படாமலும் சார்ந்த பணியாளர்கள் ஓய்வு பெறும் நிலையிலோ அல்லது ஓய்வு பெற்ற பின்னர் கருத்துருக்கள் இவ்வலுவலகத்தில் பெறப்பட்டு வருகின்றது. எனவே கீழ்காணும் விவரங்கள் 20.03.2024க்குள் உடன் அனுப்பி வைக்குமாறு அனைத்து அரசு உயர்நிலை / மேல்நிலை மற்றும் கல்வி அலுவலர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

1. நேரடி நியமனம் மூலம் பணிநியமனம் பெற்றுள்ள இளநிலை உதவியாளர்கள் / தட்டச்சர்களுக்கு உரிய விதிகளையும், பணி நியமன ஆணையில் வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகளையும் (Conditional Appointment) பூர்த்தி செய்து உடன் பணிவரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும்.
2. நேரடி நியமன உதவியாளர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்கள் பணிநியமனம் பெற்று தகுதிகாண் பருவ காலத்திற்குள் தேர்ச்சி பெற வேண்டிய துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறாமல் அதற்கான விதித்தளர்வு கோரும்

கருத்துருக்களும் பெறப்பட்டு வருகிறது.  இவை முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும்.

3. இதுநாள் வரை பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி முடிக்கப்பட்டு, நாளதுவரை தகுதிகாண் வரும் முடிக்கப்படாமல் உள்ள பணியாளர்களின் விவரங்களை (உதவியாளர் / இளநிலை உதவியாளர்)இணைப்பில் காணும் படிவத்தில் தனித்தனியாக பூர்த்தி செய்து அனுப்பி வைக்குமாபறு அறிவுறுத்தப்படுகிறது.
4. 53வயது கடந்துவிட்டமையால் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி பெறுவதிலிருந்து விலக்கு கோரும் கருத்துருக்களை உரிய காலத்திற்குள் (53 வயது நிறைவடைந்தவுடன்) அனுப்பப்பட வேண்டும்.

இணைப்பு.படிவங்கள் – 1,2,3

//ஒப்பம் //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர் 632 009

பெறுநர்
1.முதன்மைக் கல்வி அலுவலர்,
ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி,
முதன்மைக் கல்வி அலுவலகம்,
வேலூர்.
2. அனைத்து உயர்நிலை / மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.